33 ஆவது

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

Scan QR Code


ISSN 2792-1026

முக்காலமும் வென்று மூன்றாம் அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் துணிந்தெழு சஞ்சிகை

+94757000791 www.skytamilnews.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் இதழ் - 33 29 பெப்ரவரி 2024 @skytamil.lk

Sky Tamil Media Network (Pvt) Ltd



இலங்கையில் உள்ள உணவடுன கடற்கரை பற்றிய தொகுப்பு



ஒரே நேரத்தில் 45 ஜெர்சிகளை அணிந்து கின்னஸ் சாதனை



கத்தாரில் WWP அமைப்பின் முதலாவது ஆண்டு நிறைவு விழா



கத்தார் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியின் சிறப்பு தொகுப்பு



## ஆளுமை அறிமுகம்

## பெண் அறிவிப்பாளர் றம்ஸானா சமீல் சிறப்பு நேர்காணல்

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
Thuninthelu Magazine
மாதந்தோறும் | இதழ் - 33 | 29 பெப்ரவரி 2024





ஒரே நேரத்தில்
45 ஜெர்சிகளை அணிந்து
கின்னஸ் சாதனை

04
பக்கம்

08
பக்கம்

இலங்கையில் உள்ள
உணவடுன கடற்கரை
பற்றிய தொகுப்பு





ஆளுமை அறிமுகம்
பெண் அறிவிப்பாளர்
றம்ஸானா சமீல்
சிறப்பு நேர்காணல்

12
பக்கம்

28
பக்கம்

கத்தார் ஆசிய கோப்பை
கால்பந்து போட்டியின்
சிறப்பு தொகுப்பு





கத்தாரில் WWP அமைப்பின்
முதலாவது ஆண்டு
நிறைவு விழா

30
பக்கம்

sky தமிழ் Media Network
Reg No: PV 00249082

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙට්



## ஜே.எம்.பாஸித்

ஸ்தாபகர், பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை

+94776391188



## ஷிஹானா நௌபர்

பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

+94781069510

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) - கத்தார்
யாழினி குமார் - கத்தார்

**ஸ்தாபகர், பணிப்பாளர்:**
ஜே.எம். பாஸித்

**முகாமையாளர்:**
அஸ்வர் ரிஸ்வி

**பிரதம ஆசிரியர்:**
ஷிஹானா நௌபர் - பலாங்கொடை

**இணையாசிரியர்:**
ஸகியா பாறுக் - சம்மாந்துறை
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி
ஹுசைப் முஸம்மில் - வடதெனிய

**ஆசிரியர் குழு :**
ஆர்.எம்.சப்ராஸ் - புத்தளம்
முனீரா வாஹித் - பதுளை
குலசிங்கம் கிலசன் - கல்முனை
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமென்) - கண்டி
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா – கொழும்பு
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
நிஹாசா நிசார் - கத்தார்
ஷீபா இப்றாஹீம் - மருதமுனை
றிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
பாத்திமா சம்சுடீன் - சாய்ந்தமருது
அவ்ஷபா நாகூர்- ஏறாவூர்
அர்சிதா அமீர்
மொஹமட் நிப்றாஸ்
நூர் ஷாஹிதா

**இணையதள பொறுப்பாளர்:**
ஹுசைப் முஸம்மில் - வடதெனிய
அஸ்ரி இப்னு அமீர்

**விளம்பர பொறுப்பாளர்:**
ரிப்னா ரிபாய்

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

# ஒரே நேரத்தில் 45 ஜெர்சிகளை அணிந்து கின்னஸ் சாதனை படைத்த சிறுமி





சோபியா என்ற அந்த சிறுமி உலக சாதனை படைக்கும் போது அங்கிருந்த ஒவ்வொரு ஜெர்சியையும் இடுப்பு வரை இழுக்க வேண்டி இருந்தது. முதலில் சிறிய அளவிலான ஜெர்சியும் பின்னர் அளவில் பெரிய ஜெர்சியும் அணிந்திருந்தார்.

சமீப காலமாக உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பலரும் பல்வேறு உலக கின்னஸ் சாதனை படைத்து வருகின்றனர். அந்த வகையில் அமெரிக்காவை சேர்ந்த ஒரு சிறுமி ஒரே நேரத்தில் 45 ஜெர்சிகளை அணிந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார். சோபியா என்ற அந்த சிறுமி உலக சாதனை படைக்கும் போது அங்கிருந்த ஒவ்வொரு ஜெர்சியையும் இடுப்பு வரை இழுக்க வேண்டி இருந்தது. சோபியாவை போலவே அவரது தாயாரும் உலக சாதனை படைத்துள்ளார். முதலில் சிறிய அளவிலான ஜெர்சியும் பின்னர் அளவில் பெரிய ஜெர்சியும் அணிந்திருந்தார்.

சோபியா உலக சாதனையை தான் வசிக்கும் இடத்தில் உள்ள பொது நூலகத்தில் படைத்தார். முன்னதாக பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 11 வயது சிறுவன் தோமஸ் உமாம்போ ஒரே நேரத்தில் 40 ஜெர்சிகளை அணிந்திருந்ததே உலக சாதனையாக இருந்தது. அதனை சோபியா முறியடித்தார்.

# கத்தாரில் நடைபெறவிருக்கும் உலக அளவிலான இணைய உச்சி மாநாட்டில் ஒரே ஒரு தமிழ் ஊடகவியலாளர் ஸ்கை தமிழ் ஜே.எம். பாஸித் பங்கேற்பு


உலகின் மிகப் பெரிய இணைய தொழில்நுட்ப மாநாடான “Web Summit” இவ்வருடம் கத்தாரில் தோஹா கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் (DECC) பெப்ரவரி 26ம் திகதி முதல் நான்கு நாட்களுக்கு நடைபெற்றது.

**இந்த மாநாட்டில் முதன் முறையாக இலங்கையர் என்ற வகையில் ஸ்கை தமிழ் ஊடகம் சார்பாக ஊடகத்தின் பணிப்பாளர் ஜே.எம். பாஸித் அவர்கள் ஊடகவியலாளராக கலந்து கொண்டார். மாநாட்டில் ஒரே ஒரு தமிழ் ஊடகமாக ஸ்கை தமிழ் ஊடகம் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.**




மேலும் இம்மாநாட்டில் கத்தார் நாட்டின் பிரதமர், விண்வெளிக்குச் சென்ற முதல் அரபுப் பெண்மணி சாரா சப்ரி, டிக்டோக் நிறுவனத்தின் பிரதிநிதிகள், பிரபல ஃபேஸ்புக் தளமான மெட்டா நிறுவனத்தின் பிரதிநிதிகள், மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் பாலிவுட் நடிகை நோரா ஃபதேஹி என உலக அளவில் முன்னிலையில் உள்ள பிரதிநிதிகளும் 12,000இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களும் 80 நாடுகளுக்கும் மேற்பட்ட 1,000 புதிய தொழில் முனைவோர்களும் சமீபத்திய இணைய தொழில்நுட்பம் பற்றி விவாதிக்க ஆயிரக்கணக்கான தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள தொழில்நுட்பத் தலைவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.






More Details : https://qatar.websummit.com/



# உணர்ச்சி புறக்கணிப்பு என்றால் என்ன?

# What is Emotional Neglect?

**Sheefa Ibraheem (M.A - UPDN)**
Psychological Counselor, Writer,
Author & Ampara
District Coordinator : Sky Tamil Media Network

உணர்ச்சி ரீதியான புறக்கணிப்பு என்பது இணைப்பு, ஆதரவு, அன்பு, கேள்விகளுக்கு பதிலளித்தல், உணர்வுகளைப் புரிந்து கொள்ளல் போன்ற அடிப்படை விடயங்களை உள்ளடக்கியது. அதாவது ஒருவரின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்காமை, தகுந்த எதிர்வினைகளை வழங்காமை, ஒத்துணர்வு வழங்காமை, அரவணைக்காமை போன்ற ஏதேனுமொரு காரணத்தால் குறித்த நபரின் உணர்வுகளைப் புறக்கணித்தலே உணர்வு ரீதியான புறக்கணிப்பு எனப்படுகிறது.

உடல், பாலியல் அல்லது வாய்மொழி ரீதியான துஷ்பிரயோகத்தை விட உணர்ச்சி ரீதியான புறக்கணிப்பு மிகவும் வெளிப்படைத் தன்மையற்றதும், அதை அனுபவித்தவர்களும் கூட கண்டறிவது கடினமானதுமான ஒன்றாகும். இது பெற்றோரால் பிள்ளைகளுக்கு அல்லது ஒரு நபரால் இன்னொரு நபருக்கு திட்டமிட்டு அல்லது வேண்டுமென்றே செய்யப்படுவதல்ல மாறாக பிள்ளைகளின் அல்லது பிறரின் உணர்வுத் தேவைகளை உரியவாறு பூர்த்தி செய்யாததன் அபரிமிதமான விளைவாக இது அமையும் எனலாம்.

இதற்கு உதாரணத்தை நோக்கலாம், வீட்டில் குழந்தைகள் அழும் போது சாதாரணமாக "நீ அழு ராஜ அழு" போன்ற சொற்றொடர்களை பிரயோகிக்கின்றோம். இது எம்மளவில் மிகச் சாதாரணமான விடயம் தான். ஆனால் குழந்தைகள் உலகில் இதற்கு மாபெரும் கருத்திருப்பதை நாம் அறியவில்லை தானே? “தங்கள் துன்பம் அல்லது உணர்வுகளை தொடர்ந்து புறக்கணிக்கிறார்கள் எம்மை நிராகரிக்கிறார்கள்” என்ற உணர்வுகளை இது குழந்தைகள் மத்தியில் உருவாக்குகிறது.

குழந்தை உளவியலைப் பொறுத்தவரை இது ஒரு குழந்தையின் உணர்ச்சிகளை இழிவுபடுத்தும்,



குழந்தையின் உணர்வுகளைக் கேட்க மறுக்கும் செயலாகும். இது அவர்களின் உணர்ச்சிகள் முக்கியமற்றவை என குழந்தைக்கு கற்பிக்கும்.

உணர்ச்சி ரீதியான புறக்கணிப்பு குழந்தைகளுக்கு அதிர்ச்சிகரமானது. காலப்போக்கில், இது அவர்களின் வளரும் அமைப்புக்கு எதிர்மறையான தாக்கத்தை செலுத்துகிறது, சில சமயங்களில் சிக்கலான அதிர்ச்சி அல்லது சிக்கலான PTSD (Post Traumatic Stress Disorder) அறிகுறிகளை ஏற்படுத்துகிறது.
இதனை,

1. ஒரு குழந்தையை அவர்களின் உணர்வுகளுக்காக இழிவுபடுத்துதல்.

2. ஒரு குழந்தையை வேண்டுமென்றோ/ வேலை நிமிர்த்தமோ புறக்கணித்தல்.

3. குழந்தையின் தேவைகளைப் புறக்கணித்தல் / கவனிக்காது விடுதல்.

4. குழந்தையின் வாழ்க்கையில் கிடைக்காமல் இருப்பது அல்லது இல்லாதது பற்றி நகைப்பாக பேசுதல் (மிகச் சிறிய விடயமோ/ பெரிய விடயமோ எதுவாக இருப்பினும் சரி)

5. சகாக்கள் அல்லது அன்புக்குரியவர்களிடமிருந்து ஒரு குழந்தையை தூரப்படுத்துதல். (இது சமூக ரீதியாக தனிமைப்படுத்துதலாகும்)

6. எல்லா நேரமும் பாசத்தை வழங்க மறுத்தல்.

7. கடினமான சூழ்நிலைகளில் உணர்ச்சிபூர்வமான ஆதரவை கொடுக்க மறுத்தல்.

8. அவர்களின் துக்கம், கோபம் போன்ற எதிர்மறையான உணர்வுகளை சரியாகக் கையாளாமை.

9. அவர்களின் ஏக்கங்கள், முறைப்பாடுகளை கண்டு கொள்ளாமை.

10. அவர்களின் தனியுரிமைகளை மதிக்காமை.

இது போன்ற அன்றாட வாழ்வில் நாம் அறியாது செய்யும் மிகச் சிறிய விடயங்களில் கூட உணர்வு ரீதியான புறக்கணிப்பு பாரிய பாத்திரத்தை வகிப்பது கவலைக்கிடமான விடயமாகும். குழந்தைகளின் விடயத்தில் மட்டுமல்லாமல் தன் துணைகளின் விடயத்திலும் இது மிக சகஜமாக இடம்பெறுகின்றது. நாளடைவில் இது உறவுகளின் பிணைப்பில் பாரிய கேள்விக்குறியாகிவிடுகின்றது.

உணர்வு ரீதியான புறக்கணிப்பு தொடர்பாக அனைவரும் மிக ஆழமான அறிவினைப் பெறுவது காலத்தின் கட்டாயமாகும்.

**(தொடரும்)**



# இலங்கையில் உள்ள உணவடுன கடற்கரை பற்றிய தொகுப்பு

எஸ்.ஐ.எம்.நிப்ராஸ்(JP),
ஓட்டமாவடி

இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 136 கிலோ மீட்டர் தூரத்தில் உணவடுன கடற்கரை அமைந்துள்ளது. அதேபோல் கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து தெற்கே 150 கி.மீ தொலைவில் உனவடுனா காணப்படுகின்றது.

காலி நகரில் இருந்து சுமார் 6 கிலோமீட்டர் தூரத்தில் உணவடுன கடற்கரை காணப்படுகின்றது

இலங்கையின் தென் மாகாணத்தில் அமைந்துள்ள கடற்கரைகளில் மிகவும் பிரபலம் வாய்ந்த கடற்கரையாக இதனை குறிப்பிடலாம்.

சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் தலைநகரில் இருந்து காலி போன்ற பகுதிகளுக்கு பயணிப்பதற்காக அதிகமாக குளிரூட்டப்பட்ட ரயில் வண்டி பயணங்களையே விரும்புகின்றார்கள் குறிப்பாக இப்பயணங்கள் கரையோர பகுதிகள் ஊடாக கடற்கரை அருகாமையினாலும் ரயில் தண்டவாளங்கள் காணப்படுகின்றமையினால் ரயில் வண்டி பயணங்கள் மிகவும் சுவாரசியமாகவும் மனதுக்கு இதமானதாகவும் இப்பயணங்கள் அதிக அதிகமாக சுற்றுலா பயணிகளை கவர செய்கின்றன அதனாலயே அதிகமான சுற்றுலா பயணிகள் உணவடுன கடற்கரை போன்ற பகுதிகளுக்குச் செல்வதற்காக ரயில் பயணங்களை தேர்ந்தெடுக்கின்றார்கள்.

2004 இல் சுனாமியின் போது இவ் இடம் முழுமையாகஅழிக்கப்பட்டது, அதன் பிற்பாடு மறுகட்டமைப்பு அவசரமாக செய்யப்பட்டு இலங்கையின் சுற்றுலாத்துறையில் மீண்டும் மிளிர தொடங்கியது.

உணவடுன கடற்கரை என்பது தெளிவான கடல் நீர் மற்றும் மென்மையான வெள்ளை மணலைக் கொண்ட நீண்ட அழகிய கடற்கரையாகும். கடற்கரையில் நீச்சல், ஸ்நோர்கெலிங் மற்றும் சர்ஃபிங்கிற்கு போன்றவற்றை சுற்றுலா பயணிகள் மேற்கொள்ள சிறந்த இடமாக காணப்படுகின்றது. மேலும் கடல் ஆமைகள், வண்ணமயமான



மீன்கள் மற்றும் பவளப்பாறைகள் உள்ளிட்ட பல்வேறு கடல்வாழ் உயிரினங்களின் இருப்பிடமாகவும் இது திகழ்கின்றது. கடற்கரை உணவகங்கள் மற்றும் மதுபான சாலைகள் வரிசையாக உள்ளது. இங்கு வரும் பார்வையாளர்கள் சுவையான உள்ளூர் உணவுகளையும் புத்துணர்ச்சியூட்டும் பானங்களையும் தினம்தோறும் அனுபவிக்க முடியும். உணவடுன இப்பகுதியில் அமைந்துள்ள பல ஸ்பாக்கள் மற்றும் ஆரோக்கிய மையங்களுடன் மேலும் சுற்றுலா பயணிகளுக்கு உற்சாகமூட்டி தங்களது விடுமுறையை சிறப்பாக ஒய்வெடுக்கும் இடமாகவும் திகழ்கின்றது.

உணவடுன பச்சை பனை மரங்களால் சூழப்பட்ட தங்க மணல்களை மற்றும் தெட்ட தெளிவான நீரைக் கொண்ட அழகான வாழைப்பழ வடிவமைப்பைக் கொண்ட கடற்கரையாகும்.

உணவடுன கடற்கரையில் உள்ள ஆடம்பரமான மற்றும் விலையுயர்ந்த சுற்றுலா விடுதிகளும் மேலும் நடுத்தர அளவிலான சுற்றுலா விடுதிகளும் காணப்படுகின்றது சுற்றுலா பயணிகள் அவர்களின் நிலைக்கேற்ப சுற்றுலா விடுதிகளை தெரிவு செய்து கொள்ள முடியும்.

இலங்கையின் முக்கிய சுற்றுலாத்தலமாகவும், கடற்கரை மற்றும் பவளப்பாறைகளுக்காகவும் அறியப்படுகிறது. இது இங்கு காணப்படும் அனைத்து உள்ளூர் சமூகங்கள் மற்றும் பங்குதாரர்கள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு வகையிலும் பயனளிக்கும் பகுதியாக காணப்படுகின்றது. இக்கடற்கறையானது இலங்கையில் காணப்படும் சுத்தமான கடற்கரைகளில் ஒன்றாகவும் மற்றும் விடுமுறை மற்றும் ஓய்வெடுக்க சிறந்த இடங்களில் ஒன்றாகவும் சுற்றுலா பயணிகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றது.







# விடியலை நோக்கி!

கவிஞர் ஆ.க.ராதா
கள்ளக்குறிச்சி.

நேற்று நடந்ததை எண்ணி வருந்தாமல்
இன்றைய நிகழ்வுகளை அசை போட்டு
இனிவரும் காலங்களில்
நிகழ்த்த விரும்பியதை
என்றும் மனதில் குறிக்கோளாய் எடுத்திடு!

நன்மைகளை மட்டுமே நடைபோட முயன்று
இன்னல் பல சுமந்திடினும் எழுந்திடு ஏற்றங்கள் காணாமல்
திண்ணிய எண்ணம் எல்லாம் நடந்தேறிட
தீர்க்கமாய் செய்திட துணிந்து எழுந்திடு!

கற்றவை உடனிருக்க கண்களில் தெளிவுற்று
செவிமடுத்த செய்திதனை சென்று சேர்த்திடவே
சேற்றில் முளைத்த செந்தாமரையாய்
சிறந்திடக் கடினமான பாதையை கண்டு நீயும்
கற்கண்டாய் மாற்றிட கடுமையாக உழைத்திடு!!

உழைத்தவரின் உதிரத்தினை ரத்தினமாய் ஜொலிக்கவைக்க
உன்னால் ஆனதை செய்திட முயன்றிடு!

உழைப்பின் பெருமையை ஊருக்கு பறைசாற்ற
உன்னதமான முறையிலே உறுதி கொண்டோனாய்
ஊக்கத்துடன்
அரும்பாடுபட்டு அறிவிப்பு செய்திடு!

இல்லாதோர் நிலை எண்ணி ஏங்காமல்
ஏற்றிவிடும் ஏணியாய் நீயும் இருந்திடு!

மடமைகளுடன் மல்லுக்கு நிற்காமல் முனைந்து
மனதின் திட்டத்தினை வலுப்பெற செய்திடு!

வாழ்க்கையில் இன்பங்கள் துன்பங்கள் சரிபாதி
ஆயினும் ஆக்கங்கள் அதிகரிக்க அறிவினை
ஆயுதமாக மாற்றிட அலையாக எழுந்திடு!

# இதய வாசல்
## (முதியோர் இல்லம்)

அன்பினால் இல்லம் கட்டி
அன்பினால் உள்ளம் தொட்டு
அன்பை தந்து இன்பம் வாங்கும்
பின்னிக்கோர்த்த புதுஉறவுகள் - இது
துன்பம்தீர வழிகாட்டும் இதயவாசல்!

வாழ்வை வாழ்ந்து முடிக்கையில்
பழுத்த இலைகளுக்கு புதுசுவாசம் !
வாயார சிரித்து
ஆழ்ந்துறங்கி
மனமகிழ்ந்து வயிறு நிறைந்து
மதிப்புடன் கிடைக்கபெறும் புதுப்பாசம் !

வாழ்ந்து ஓய்ந்த வயதில்
எமக்கு சுதந்திரம் சுவாசிக்க
நிரந்தர வசந்தகாலம்!
மனதிற்கு உவந்த காலம்!
ஸ்வரங்களும் இசைந்து - எம்
ஸ்ருதி மீண்டகாலம்!

ரத்தஉறவுகளுக்கு பின்வந்த
புத்தம்புது மனிதர்கள் !
மனிதநேயம் நிறைந்த
புனிதம்சேர் புதுஉலகு ! - இது
இதயவாசலுக்குள் ஒரு சொர்க்கலோகம் !

வாழ்த்த வேண்டி வாய்க்கு வந்த
வாழ்த்துப்பா அல்ல - இது
மறுக்கப்பட்ட எங்களின்
இரண்டாம் வாழ்வுப்பா!

எஸ் .ஹறிணி செந்தில் குமார்
பெரியகுளம்.

# புன்னகை!

கோவலனை சுருட்டிய மாதவியின்
கவர்ச்சி புன்னகை!
மறுபிறவியெடுத்து மழலை முகம் கண்ட
தாய்மை புன்னகை!

பிரபஞ்சத்தின் அழகெல்லாம் நிறைந்த
மழலை புன்னகை!
புகுந்தவீட்டு ஒப்புதலில் பிறந்தவீடு வந்த
மகளின் புன்னகை!

ஆசையை விட்டொழித்த புத்தனின்
மந்தகாச புன்னகை!
கணவனின் குதர்க்கம் வெளிக்காட்டாத
மனைவியின் சாதுர்ய புன்னகை!

தீபாவளி பலகாரத்தை அகமகிழ தரும்
சகோதரனின் பாசப் புன்னகை!
துன்பத்தில் தோளாகும் தோழியின்
ஆத்மார்த்த புன்னகை!

படிப்பில் சாதிக்க ஊரினில் புகழ்பாடும்
தந்தையின் கெத்து புன்னகை!
கவியெழுதி சான்றிதழ் கிடைக்கப் பெறும்
கவிஞனின் சாத்வீகப் புன்னகை!


இத்தனை புன்னகைகளும்
இதயப் பூட்டின் திறவுகோல்களே!

முனைவர். பெ.தமிழ்ச்செல்வி.
வாலாஜாப்பேட்டை.

# ஆளுமை அறிமுகம்

## பெண் அறிவிப்பாளர் றம்ஸானா சமீல்

### சிறப்பு நேர்காணல்



கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தின் பட்டியடிப்பிட்டியில் வசித்து வரும் அப்துல் மஜீட் ஸஹ்வா உம்மா தம்பதியின் 2 ஆவது புதல்வி றம்ஸானா சமீல். இவர் தனது ஆரம்ப கல்வியை அக்/அர்ரஹீமியா வித்தியாலயத்திலும் உயர்தரத்தை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி இல் கற்றார்.

தற்போது இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலைமானி பட்டதாரியாவார். இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப் எம் இல் 17 வருடங்களாக அறிவிப்பாளராக கடமையாற்றி வருவதோடு முகநூல் தொலைக் காட்சிகளில் பெண்களுக்கான சிறப்பு நேர்காணல் நிகழ்வுகளையும் தொகுத்து வழங்கும் தொகுப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

**நேர்காணல் : மஜினா உமறு லெவ்வை மாவடிப்பள்ளி.**

**கேள்வி : அறிவிப்பு துறையில் ஆர்வம் ஏற்படக் காரணம்?**

பாடசாலையில் கல்வி கற்கும் போது இலங்கை வானொலி தென்றல் மற்றும் வர்த்தக சேவை போன்றவற்றின் நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்டு வருவேன் . அறிவிப்பாளர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் விதம் அதன் நிகழ்ச்சிகள் யாவும் என் மனதை கவர்ந்தவையாகவே இருந்ததால் எனக்கும் அறிவிப்பாளராக வர வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.மேலும் பாடசாலையில் ஒரு

வாசிப்பை மேற் கொள்ளும் போதிலும் அல்லது கலை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதிலும் எனது உச்சரிப்பு நான் பகிர்ந்து கொள்ளும் விடயங்கள் ஒரு அறிவிப்பாளரைப் போலவே இருக்கின்றன என்று எனது ஆசிரியர்கள், எனது சக நண்பிகள் என்னை உற்சாகமூட்டிய விதம் எனக்குள் இப்படி வரவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

**கேள்வி : உங்கள் ஊடகப் பயணம் எப்போது ஆரம்பமானது?**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பிறை எப் எம் 2005.11.04 இல் ஆரம்பிக்கப்பட்டு அதன் இரண்டாவது வருட நிறைவுக்குள் 2007ம் ஆண்டு அறிவிப்பாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அந்தவகையில் நானும் ஓர் அறிவிப்பாளினியாக தெரிவு செய்யப் பட்டு அன்று முதல் இற்றை வரை சுமார் 17 வருடங்களாக கடமையாற்றிக் கொண்டிருக்கிறேன்.








**கேள்வி: அறிவிப்புத் துறையில் உங்கள் அனுபவம் பற்றிக் கூறுங்களேன்?**

அறிவிப்புத் துறை என்பது ஒரு கடல் போன்றது என்னைப் பொறுத்தவரை இன்னும் இன்னும் கற்க வேண்டிய விடயங்கள் இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.குறிப்பிட்ட சில நாட்களே பயிற்சியளிக்கப்பட்டு எமது வானொலியின் மதிப்பிற்குரிய பிரதிப் பணிப்பாளர் அல்ஹாஜ் பசீர் அப்துல் கையூம் வேண்டுகோளுக்கிணங்க பல்வேறு நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வருகின்றேன். இதிலும் கடந்த 7 வருடங்களாக பிரதி வெள்ளிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் 'மகளிர்மட்டும்' என்ற நிகழ்ச்சியை தயாரித்து தொகுத்து வழங்கி மங்கையர் மட்டுமல்லாமல் அனைத்து நேயர்களின் வரவேற்பையும் பெற்று வந்ததோடு எந்த சந்தர்ப்பத்தில் என்ன நிகழ்ச்சி வருகின்றதோ அதாவது மனதோடு பிறை, இடைவேளை, நிதம், இசைமாலை, இவ்வார நேயர், மாலை மருதம் போன்ற நிகழ்ச்சிகளையும் நேயர்களின் விருப்பத்திற்கேற்ப சுவை பட மிகத்திறமையாக தொகுத்து வழங்கி பல்லாயிரக்கணக்கான நேயர்களின் அபிமானத்தை பெற்றதோடு முகநூல் தொலைக் காட்சிகளிலும் சாதனை படைத்த பெண்களை செவ்வி கண்டு அனேகமானவர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளேன்.

இன்னும் வெளிக்கள நிகழ்வுகளை தொகுத்து வழங்கி வர்த்தக விளம்பர நிகழ்ச்சி மூலம் சிறந்த வர்த்தக நிகழ்ச்சி தொகுப்பாளர் என்ற பெயரையும் பெற்றுள்ளேன்.கடந்த 6 வருடங்களுக்கு மேல் இலங்கை வானொலி தென்றலில் இடம்பெற்ற.' அல்லியுடன் ஒரு நிமிடம் ' நிகழ்ச்சியை மூத்த அறிவிப்பாளர் k. ஜெயகிருஷ்ணா அவர்களுடன் இணைந்து தொகுத்து வழங்கி அன்னை வானொலி தென்றலிலும் குரலை பதிவு செய்துள்ளேன்.

**கேள்வி : சான்றிதழ்கள், விருதுகள்?**

கிழக்கிலங்கை இளைஞர் அமைப்பினால்' சிறந்த பெண்' அறிவிப்பாளருக்கான விருதினை இரண்டு தடவைகள் பெற்றுள்ளேன்

லக்ஸ்டோ மீடியாவினால் "சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான விருது 'கலை முத்து' பட்டம்..

Srilanka pen clubஇனால் 'சிறந்த நிகழ்ச்சி தொகுப்பாளருக்கான' விருது

Zaithoon Nhar foundation Canada இனால் 'சிறந்த பெண் குரல்' க்கான விருது

RJ மீடியாவினால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான'விருது

2022 கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல் திணைக்களத்தால் வழங்கும் ஊடகத் துறைக்கான 'இளம்கலைஞர்' விருது.





னேகமான நேயர்களால்' பிறைக் குயில், என்ற பட்டத்தையும் பெற்றுள்ளேன்.

**கேள்வி: அறிவிப்பாளருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பற்றிக் கூறுங்களேன்?**

அறிவிப்பாளருக்கு இருக்க வேண்டிய முக்கிய தகைமைகளாக தமிழ் மொழியை சிறப்பாக உச்சரிக்கக் கூடியவராகவும் க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ் மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதோடு அறிவிப்புத் துறையில் ஆர்வம் உள்ளவராகவும் புத்தாக்க சிந்தனையுடையவராகவும் இருக்க வேண்டும்.







**கேள்வி : பெண்ணாக நீங்கள் இத்துறையில் சந்தித்த சவால்கள் இருப்பின் கூறுங்கள்?**

கள விஜயங்களிலுள்ள கஷ்டம் அகால வேளைகளிலான நிகழ்ச்சிகளில் தனித்து பணியாற்றுவதிலுள்ள சிரமம் தகவல்களை பெறுவதில் உள்ள சிரமம் பாலியல் தொடர்பான விழிப்புணர்வு அறிவிப்பு செய்வதில் கலாசார வரம்பு குழந்தை வளர்ப்பு பிரச்சினை உண்மை கருத்துக்களை துணிந்து வெளிப்படுத்த முடியாத நிலை புரிதலற்ற நேயர்களின் நக்கல் நையாண்டிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆண் அறிவிப்பாளர்களோடு சமாந்தரமாய் பணியாற்றக் கூடிய ஆற்றல் இருப்பினும் சமூக விமர்சன அச்சம் நிர்ப்பந்தத்தோடு குறைந்த கொடுப்பனவுகளை பெறவேண்டிய நிலை ஆண்களுக்கு ஈடான கொடுப்னவுகள் வழங்கப்படாமை போன்றன .




**கேள்வி : ஒரு குடும்பப் பெண்ணாக இருந்து கொண்டு அறிவிப்பாளராகவும் பணியாற்ற உங்களால் எப்படி முடிகிறது?**

குடும்பத்தின் கடமைகளை நிறைவேற்றுவதிலும் அதில் எந்த குறைகளையும் வைக்காமல் குறியாக இருப்பதோடு மேலதிகமாக ஓய்வு நேரங்களில் இத்துறையை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு செயற்படுவேன்.. இன்னும் சொல்லப் போனால் ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பதைப் போன்று என்னுடைய வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆணாக இருந்து என் கணவர் எனக்கு செய்யும் ஆக்கமும் ஊக்கமும் எனது குடும்பத்தின் நிறைய விடயங்களை கவனிப்பதும் எனக்கு எந்த சவால் வருகின்ற சந்தர்ப்பத்திலும் அதனை எதிர்கொண்டு எனக்கு தரும் நம்பிக்கையும் என்னால் ஒரு குடும்ப பெண்ணாக இருந்து கொண்டு அறிவிப்பாளராகவும் பணியாற்ற முடிகிறது.

**கேள்வி : அறிவிப்பு துறை மாத்திரமன்றி வேறு துறைகளிலும் ஈடுபாடு உண்டா?**

ஆமாம் , இலக்கியத் துறையில் கவிதைகளை எழுதி வருகின்றேன். இப்போது சிறு சிறு கவிதைகளை எனது முகநூல் பக்கத்தில்



பதிவிட்டு வருகின்றேன். 40க்கு மேற்பட்ட கவிதைகளை எழுதி பதிவிட்டதோடு இன்ஷா அல்லாஹ் விரைவில் அதனை புத்தகமாக வெளியிடவும் இருக்கின்றேன்.

மேலும் சமூக சேவையில் சுமார் 18 வருடங்களாக சேவையாற்றிக்கொண்டு வருகின்றேன். கிராமங்களில்' பின் தங்கிய பிரதேசங்களில் என்று அக்கரைப்பற்று மாநகர மற்றும் பிரதேச சபைக்கு கீழ் இருக்கின்ற மக்களில் பெண்தலைமைதாங்கும் குடும்பம் , விசேட தேவை உடையவர்கள், வருமானம் குறைந்த குடும்பங்கள், சிறுவர்கள் முதியோர் என்று பல பிரிவினர்களுக்கும் சமூகசேவை நிறுவனங்கள் ஊடாக பல உதவிகளைப் பெற்று சேவை செய்து கொண்டு வருவதோடு பல சமூகசேவை நிறுவனங்களில் தலைவியாக, உப தலைவியாக செயலாளராக, பொருளாளராக, கணக்காய்வாளராக, நிர்வாக சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டு எனது பொறுப்பையும் சரிவர நிறைவேற்றிக் கொண்டு வருகின்றேன்.

**கேள்வி : வளர்ந்து வருகின்ற இளம் அறிவிப்பாளர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

அறிவிப்பாளர் என்ற உங்கள் கனவினை நிறைவேற்ற வேண்டும் என்று இருப்பவர்கள் அதற்கான தகைமை உள்ளவராக இருப்பதோடு அதிகமாக முயற்சி செய்வதிலும் மூத்த அறிவிப்பாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று அவற்றுக்கேற்ப செயற்பட வேண்டும்.

மேலும் இது எல்லோராலும் விரும்பப்படும் ஒரு துறையாக இருப்பதனால் இது பற்றி பல அறிவிப்பாளர்கள் வெளியிட்ட நூல்களை கற்பது தேடல் கூடியவர்களாக எங்களை மாற்றுவது அதிகமாக சமகால நிகழ்வுகளில் தேடிப் பெற்றுக் கொள்வது நாங்கள் தொகுத்து வழங்க இருக்கும் நிகழ்ச்சி பற்றி முன் கூட்டியே தெரிந்துகொள்ள முயற்சிகளை மேற்கொண்டு நிகழ்ச்சிகளைப் படைக்க வேண்டும்.மேலும் ஆண் பெண் யாராக இருந்தாலும் சமூகத்தில் வரும் சவால்களுக்கு முகம் கொடுப்பதோடு வருகின்ற தடைக் கற்களை படிக்கற்களாக மாற்றி எங்களை நாங்கள் முன்னேற்றமாக வளப்படுத்த வழி கோர வேண்டும்.

**கேள்வி : துணிந்தெழு சஞ்சிகை பற்றிய உங்கள் கருத்து?.**

உண்மையில் இப்படியான ஒரு சஞ்சிகை வெளிவருவது மிகப் பெறுமதியானது... ஆற்றல் உள்ளவர்கள் எம்மில் உள்ளவர்கள் இலைமறை காயாக இருப்பவர்களை அடையாளப் படுத்தி அவர்களின் திறமையை உலகின் வெளிச்சத்திற்கு கொண்டு வரும் உனது சேவை அளப்பரியது.. . இந்தவகையில் இச்சஞ்சிகையின் பணிப்பாளர் மற்றும் அதன் உத்தியோகத்தர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# அனுபவ வாயில் திறப்பு - 05

டிங்... டிங்... டிங்... "இமாஷா...இமாஷா... சப்ளே முடிஞ்சாச்சி வாங்க சாப்பாட்டு வேளைகு போகலாம்" சாப்பாட்டு வேளை என்பதால் சிட்டாய் பறந்து கொண்டிருந்தனர். சலசலப்பும் சத்தமும் நிறைந்த டய்னிங் ஹோலில் திடீரென பூட் லீடர் குரல் ஒலிக்கும்; "என்ன தங்கச்சிமார் இவ்வளவு சத்தம். சத்தம் இல்லாம சாப்பிடுவது கஷ்டமா? இல்லன்னா சாப்பாடு போதாவா?" திடீர் குரல்கள் ஒலித்த பின் மாயான அமைதி பூமியாய் டய்னிங் ஹோல் முழுவதும் முதல் ஐந்து நிமிடங்கள் காணப்படுவது வழக்கம். எத்தனை ஓலங்கள் வந்தாலும் உணவு ரசணைக்கதையோ பலவிதம். விடுதி உணவு என்பது பலருக்கு பாகற்காயை கசக்கி ஊட்டுவது போல் இருக்கும்; இன்னும் சிலருக்கு நாவின் சுவையரும்பு இறப்பது போல் இருக்கும்; இன்னும் சிலருக்கு பிரியாணியை ஊட்டிவிடுவது போல் உணர்வர்.

**முஷ்பிகா முன்சிர்**
**திஹாரிய**
**ஹாதியா கல்வி நிறுவன மாணவி**

வெவ்வேறான சூழலிலும் வெவ்வேறு நிலையில் வருவோரின் மனநிலைக்கேற்ப இருக்கும் உணவின் ரகங்கள் ஏகப்பட்டவை இத்தனையையும் பொறுமையுடன் சகிக்கும் உள்ளங்களே வெற்றியின் ரகசியம் தெரிந்தோர்."இந்த கறி எல்லாம் எவனாவது திண்ணுவாங்களா... " "கடமைக்கு மட்டும் தான் செய்ராங்க... " எங்களுக்கு சாப்பிட முடியாது போய் டஸ்பின்ல கொட்ட வேண்டியது தான்... "

இப்படியான பல எதிர்மறை உரையாடல்கள் ஏராளமாய் இருந்தும் ஒரு சிலர் அமைதியாய் கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

சாப்பாட்டு வேளை முடிந்து மாமரத்தின் அருகில் எல்லா இடத்தையும் நேரலை பார்க்குமிடமாய் இருக்கும் ஓர் கற்பாறை மீது அமைதியாய் இருந்து நேரலை பார்த்துக் கொண்டிருந்தால் ஆமினா. "ஹலோ மெடம் டிரீம் ல ஊட்டுக்கு பெய்த்து வந்தாச்சா? என்ற அப்ரின் இன் குரலில் ஒலித்தது. " வெகேஷன்கு இன்னம் நெனச்சே இல்லாத இங்க, கனவுல சரி ஊட்டுக்கு போககிடைச்சா அருமை தான் ஆனால்... அத யோசிக்கல்லை....

"அப்போ என்ன யோசனை?"ஏன் பிள்ளைகள் எல்லாம் இப்படி இருக்காங்க குடுக்குர சாப்பாட்ட எப்பயாவது ஒரு நாள் திருப்தியா சாப்பிடுவாங்களா? நாளுக்கு நாள் புதுப்புதுக் கதைகள் ஏராளம் சாப்பாடு என்டால் குறை சொல்லக்கூடாது என்ற நபிமொழி கூட மறக்கின்றனர்... படிப்பதல்லாம் எதற்கு தான்?"ஏட்டுச்சுறைக்காய் கறிக்கு உதவாது போல் அல்லவா இருக்கிறது நம்ம பலரின் கல்வி"

"ஆம் ஆமினா நானும் இந்த விடயத்துல கவல அடைந்தேன். உணவே இல்லாத நிலையிலுள்ள பலர் எங்கு எல்லாம் வாழ்கின்றனர். அதை விட இவை எவ்வளவு சிறந்தவை அல்லவா? சாப்பாடு அதிகம் என்று வீசுகின்ற அனைத்து உணவிற்கும் ஒவ்வொருவரும் மறுமையில் பதில் கூற வேண்டும். என்று இருவரின் பல கதைகள் தொடர்ந்து கொண்டிருந்தது.

டிங்...டிங்... டிங்...
"அப்ரின் ரெஸ்ட் டைம் பெல் பட்டாச்சி வாங்க டோம் போகலாம் " என இருவரும் அவ்விடத்திலிருந்து நகர்ந்தனர்.
குறை இல்லாமல் மனிதன் இல்லை மனிதனால் இயக்கப்படும் அணைத்தும் நிறைகளுடன் குறைகளுடனும் நிறைந்து காணப்படுவது இயல்பாகும்.

விடுதி என்று என்பதை எடுத்துக் கொண்டால் அதில் முதல் குறையாய் குற்றம் பிடிப்பது உணவில் தான். மேல் கூறியவாறு ஒவ்வொருவரினதும் ரகங்கள் வித்தியாசப்பட்டவை. சிலரின் வீடுகளில் ஒவ்வொரு நாளும் ஆடம்பர உணவுகள் என இருக்கும் இன்னும் சிலருக்கு கிழமை வாரத்தில் ஒரு நாள் இன்றும் சிலருக்கு மாதத்திலொரு நாள் இன்னும் சிலருக்கு எதாவது ஓர் இடத்தில் விஷேடம் ஆக இருந்தால் மட்டும் இப்படி உணவுகள் சற்று விஷேடமாக கிடைக்கின்றன. இதுவே வாழ்க்கை இயல்பு.

இத்தகைய வெவ்வேறு ரகங்கள் கொண்டோருக்கு விடுதி உணவு ரசனையும் எதிர்பார்ப்பும் வேறுபடுவது நியாயமான கருத்துதான். ஏழை பணக்காரன் என்று இன்றி சமத்துவமாய் திருப்தியுடன் ஏற்று உண்பதே திருப்தியான சந்தோசம் பெறும் உள்ளமாகும். உணவு தந்த பாடம் இந்த விடுதி தான் என்பதை மறுக்க முடியாது.



# நட்சத்திரங்கள்



**எழுத்தாளர் கவிபாவை**
**கார்த்திக் மலேசியா**

பெரும்பாலும் வானத்தில் நிலா தோன்றாத அன்று நட்சத்திரக் கூட்டங்கள் பல்வேறு வடிவங்களில் இருப்பதை காணலாம். பல நட்சத்திரங்கள் பளிச் பளிச்சென்று மின்னுகின்றன. நட்சத்திரங்கள் எப்படி மின்னுகின்றன?

அதற்கு ஒளி கொடுப்பது யார்? நட்சத்திரங்கள் பகல் நேரத்தில் நம் கண்களுக்கு தெரிவதில்லை. இரவில் மட்டுமே தெரிகின்றன. இதற்கான காரணம் என்ன?

நட்சத்திரம் என்பது பல்வேறு வகையான வாயுக்கள் கலந்த மேகம்.

இந்த மேகத்திற்குள் ஹைட்ரஜன் வாயு உள்ளது. வாயுத் துகள்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒரு பெரிய வாயுக் கூட்டமாக மாறுகின்றன. அவ்வாறு மாறும்போது வெப்பமும் அதிகரிக்கிறது. அது வெடிபொருளைப்போல வெடிக்கும் வரை கூடிக்கொண்டே இருக்கும். இப்படி கூடும் பொருட்கள் வெடிக்கும்போது, எரியும் தன்மைகொண்ட ஹீலியம் வாயு வெளியிடப்படுகிறது. ஹீலியம், தொடர்ந்து நட்சத்திரத்தில் உள்ள வாயுக்கள் எரிய வழிவகுக்கும். இவ்வாறு தான் நட்சத்திரங்கள் உருவாகின்றன.

பெரிதாக இருக்கும் நட்சத்திரங்கள் வேகமாக எரிகின்றன. இவை மிகப் பெரிய அளவில் வெடிக்கின்றன. பெரியதாக இருக்கும் நட்சத்திரங்களின் ஆயுட்காலம் மிகவும் குறைவு. ஆனால் பிரகாசமில்லாத நட்சத்திரங்கள் பெரிய நட்சத்திரங்களை விட நூறு மடங்கு அதிக காலம் நீடித்து இருக்கிறது.

சூரியனுக்கு பக்கத்தில் பூமி இருக்கிறது. ஆனால், நட்சத்திரங்கள் பூமியிலிருந்து மிகவும் தொலைவில் உள்ளன. சூரியனைப் போலவே பூமிக்கு அருகில் நட்சத்திரங்கள் இருந்தால் நம் மீது அதுவும் வெப்பத்தைப் பாய்ச்சியிருக்கும். சில நேரங்களில் நட்சத்திரங்கள் சாம்பலாகவும் வாய்ப்புள்ளது.

நட்சத்திரங்களின் ஒளியும், வெப்பமும் மிக நீண்ட தொலைவைக் கடந்து பூமியை வந்தடைகிறது. அவ்வாறு ஒளி வரும்போது மிக குறைவான வெளிச்சமே தொடர்ச்சியாக நம்மை வந்து சேர்கிறது. இதன் ஒளி நம்மை வந்தடையும் முன்பு பூமியின் வளிமண்டலத்தின் வழியாக பயணிக்கிறது. வளிமண்டலத்தில் தூசு அதிகமாக இருக்கும்போது நட்சத்திரம் தெரிவதில்லை. எனவே தான் நட்சத்திரங்கள் சில நேரங்களில் மட்டும் நம் கண்களுக்கு தெரிகின்றது. இந்த நிகழ்வு மிக விரைவாக நடைபெறுவதால் நட்சத்திரங்கள் மின்னுவது போன்ற ஒரு மாயத் தோற்றம் நமக்கு தெரிகிறது.

விண்மீன்கள் அனைத்தும் அதன் சுய ஒளி காரணமாக மின்னக்கூடியவையே. அதன் மின்னும் தன்மை அவற்றின் எரியாற்றலையும், பூமியில் இருந்து அதன் தொலைவையும் பொறுத்து வேறுபட்டு தெரிகிறது.

நட்சத்திரம் எல்லா நேரங்களிலும் மின்னுவதில்லை. சில நட்சத்திரங்கள் எப்போதுமே மின்னுவதில்லை. அப்படி மின்னாமல் இருப்பவை நட்சத்திரங்கள் கிடையாது, அவை கோள்கள். கோள்கள் எப்போதும் மின்னுவதில்லை. கோள்களில் வெப்பமோ, ஒளியோ கிடையாது. அவைகள் எல்லாம் நிலவைப்போல சூரியனிடம் ஒளியைப் பெற்று பிரதிபலிக்கின்றன.

என்றும் உங்களால் நான் எழுத்தாளர் கவிபாவை
கார்த்திக் மலேசியா





# இணைய வழி இணைவோம்

M.H Safiyya
Grade 7G
St/ Mary's national college Nawalapitiya

இணையம் என்பது உலகெங்கிலுமுள்ள கணனிகளின் வலையமைப்புத் தொடர்புகளின் பிணைப்பே இணையம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. அதிலும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த தொழில்துட்பம் உச்சம் தொட்ட காலத்தில் இணையவழி இணைதல் என்பது நமது உள்ளங்கைக்குள் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. எழுத வாசிக்கத் தெரியாத பாமர மக்கள் தொடக்கம் தவழ்ந்து நடக்கப் பழகும் சிறு குழந்தைகள் வரை அன்றாடம் இந்த இணையத்தில் இணைந்து கொண்டுதான் செல்கின்றார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருந்து கொண்டிருக்கின்றது.

இணையம் இன்று உலக முழுவதிலும் பலகோடி மக்களின் பயன்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புதுக்கண்டுப்பிடிப்பு என்றும் கூறலாம். மிக பழைய தகவல்களையும், இன்று புதிதாகத் தோன்றக் கூடிய பல புதிய தகவல்களையும் பெற இணையம் உதவி வருகின்றது.

தகவல்களை அனுப்புவதற்கும், தகவல்களை பெறுவதற்கும், கருத்துகளைத் தெரிவிக்கவும், வாங்கவும், விற்கவும், கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு இணையத்தில் தகவல்கள் குவிந்து கிடக்கின்றன.

அது மட்டுமல்ல

இணையத்தில் படைப்பாளர்கள் ஒவ்வொரு வரும் வெவ்வேறு தகவல்களைச் சேமித்து வைத்துள்ளார்கள். அவை இலக்கியம், இலக்கணம், திரைப்படம், வரலாறு, புவியியல், வானியல், அறிவியல், கணிதம், பொதுஅறிவு, மருத்துவம், சமையல்குறிப்பு, ஓவியக்கலை, விளையாட்டு போன்ற எண்ணற்ற தலைப்புகளில் தகவல்களாகவும், நூல்களாகவும் வெளியிட்டும் சேமித்தும் வைத்துள்ளார்கள்.



“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்”
என்ற குறளில் எண்ணியவார் எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் உறுதியுடையவராக இருக்கப்பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவார் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது போல் இந்த இணையத்திலும் தேவையானவைகளை விரல் நுணிகளின் மூலம் சில நொடிகளிலே பெற்றுக்கொள்ளலாம் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றுது.

அது மட்டுமல்ல இவை அனைத்தையும் தாண்டி சமூக வலையத்தளங்கள் என்பது எமது இளம் சமூதாயத்தின் மத்தியில் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக காணப்படுகின்றது. WhatsApp தொடக்கம் Facebook,Skype,viber,TikTok,Instagram என்று ஒன்றுக்கு ஒன்று போட்டியாக பாவனைகள் அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்த காலத்தில், தூர இடங்களில் உள்ளவர்கள் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் இருந்து முகம் பார்த்து பேசுதல், நண்பர்கள் வட்டாரம் நேரலையில் இணைதல், குடும்பம் அனைவரும் Group calling என்றும், வங்கிகளின், பெரிய திணைக்களங்களின் வருடாந்த கூட்டம் live Video conferencing மூலம் என்றும், தூர இடங்கிளில் இருந்து கல்வியை பெறுவதற்கு zoom, Microsoft Theams போன்ற இலகுவான தொழில்நுட்பங்களும் நமது மாணவர்களுக்கு கிடைத்தது ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். கடந்த கொறோனா காலப்பகுதிகளில் உலகொங்கிலுமுள்ள மாணவர்களின் கல்வியில் மிகப் பெரிய பங்களிப்பை ஆற்றியவை இவை இரண்டுமே.

வணிக நிறுவனங்கள், சமூக வலைதளங்கள் மூலம் பொருட்களை விளம்பரம் செய்து வாடிக்கையாளர்களின் கருத்துக்களை நேரடியாக அறிந்து கொள்ள முயல்கிறது. இதனால் வணிக நிறுவனங்களின் வளர்ச்சிக்குச் சமூக வலைதளங்களின் பங்கு இன்றியமையாததாகிறது.
அதுமட்டுமல்லாமல் இன்டர்நெட்டால் நன்மைகள் ஒரு புறம் இருந்தாலும், தீமைகள் பல்கிப் பெருகி, மனித குலத்தை மிரட்டிக்கொண்டு இருக்கின்றன. ஆன்லைன் வாயிலாக கிரடிட் கார்டு மோசடிகள், வைரஸ் தாக்குதல், பாலியல் குற்றங்கள், லாட்டரி மோசடிகள், வங்கிக்கணக்கு மற்றும் பாஸ்வேர்டுகளை திருடுதல், இணையதளங்களை முடக்குவது, சமூக இணைய தளங்களில் இருந்து அந்தரங்க விவரங்களை திருடுவது போன்ற சைபர் குற்றங்கள் நடக்கின்றன.

அதே போன்று சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி சில சமூக விரோதிகள் தவறான

செயல்களிலும் ஈடுபடுகின்றனர். ஆபாசமான புகைப்படங்களையும், வீடியோ பதிவுகளையும் வெளியிடுகின்றனர். இதனால் இளம் வயதினரின் மனதில் சலனம் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

அது மட்டுமின்றி இணையத்தொடர்பில் ஈடுபட்டு சிலர் பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்கின்றனர். ஒருவரே பல பெண்களை மணந்து கொள்ளும் ஏமாற்று வேலைகளும் நடக்கின்றன. சில பெண்கள் சமூக வலைதளங்களால் மன உளைச்சலுக்கு ஆளாகி வெளியில் சொல்ல முடியாமல் தற்கொலையும் செய்து கொள்கின்றனர். அதனால் சமூக வலைதளங்களின் உலகளாவிய தொடர்புகளால் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் சைபர் கிரைம் போலீசாருக்கு திண்டாட்டத்தை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு இந்த இணையவழி இணைதலின் மூலமாக பல நன்மைகள் இருந்தாலும் தீமைகளும் அதிகளவாக இருந்து கொண்டுதான் வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே இணையவழி இணைதலில் உள்ள நன்மைகளை பெற்றும், தீமைகளை தவிர்த்தும் இளம் சமூதாயத்தை பாதுகாத்து நடக்க வேண்டும்.





# இன்று நாட்டின் நிலை !!

உண்மை என்பது ஊமையானதால்,
ஓரங்கட்டப்பட்டுள்ளது.
ஓர வஞ்சகம் எதிலும் தலைவிரித்தாடுகிறது.
நேர்மை நேரடியாக பதுங்கிவிட்டது.

நீதி கிடைக்க வேண்டுமென்றால் ,நிதி
முன்வரவேண்டியுள்ளது
ஆனால் ஆசையோ ஆவலாக
அலைமோதுகின்றது.

நன்மைகள் காணக்கிடைக்காத
ஒன்றாகிவிட்டது. தீமைகள் எங்குமே
தலைவிரித்தாடுகின்றன.
பொய்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன
காரணமில்லாத காயங்கள்
தழும்புகளாகின்றன.

குடி போதையில் கொலைகள்
செய்விக்கப்படுகின்றன. களங்கமில்லாத
பிஞ்சுகள் கசக்கி எறியப்படுகின்றன.
பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தை
பசிக்காக விற்கப்படுகின்றது.

தொப்புள் கொடி உறவு தோற்றுப்போய்
விம்மி அழுகின்றது. நேற்றைய பொழுதை
விட பணமில்லாத இன்றெனும் நாள்
மோசமாயுள்ளது. வட்டிக்கு பணம்
கொடுத்தவன் வாசலில் சனக்கூட்டம்.
வெட்டிப் பேச்சுக்கு இடமளித்தவன்
வெறுமனே நடையோட்டம்.

ஆறடி நிலந்தானோ, மண்ணில் மைந்தனுக்கு
இறுதி சொந்தம் அதனாலா மண்மீது
இத்தனை வாழ்க்கை போராட்டம் யாருக்குமே
இல்லை உலகில், மரணத்தை வெல்லும்
வலிமை.

மரணமும் உயிர்களை , இன்றுவரை, விட்டு
விலகிவிடவுமில்லை
பந்தம், பாசம், பணம் இடையே மனிதன்.
இன்பம், துன்பம், மரணம், முடிவில் இறைவன்.
இதுவா வாழ்கை அந்தரங்கம்.

**அ.இராஜேஸ்வரி**
**நுவரெலியா**



# இந்த நூற்றாண்டின் பறவை எது தெரியுமா?

எம்.எச். எம் சியாஜ்
புத்தளம் மாவட்ட இணைப்பாளர்

நியூசிலாந்தின் Forest and Bird அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் "நூற்றாண்டிற்கான பறவையாக" (Bird of the Century) Pūteketeke எனும் பறவை தெரிவாகியுள்ளது. சுற்றுச்சூழலை காப்பதில் முன்னணியில் உள்ள காடுகள் மற்றும் பறவைகள் ஆர்வலர்களின் Forest and Bird அமைப்பு Bird of the Century என்ற பெயரில், "நூற்றாண்டிற்கான பறவை" எது என்பதை தேர்ந்தெடுக்க ஒரு போட்டியை நடத்தி வருகிறது.

பொதுமக்கள் பலரும், பறவைகள் ஆர்வலர்களும் இதில் பங்கேற்பது வழக்கம். இப்போட்டி 2005 ஆம் ஆண்டில், உலகில் அரிதாகி வரும் பறவைகள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வருடம் சுமார் 200 நாடுகளில் இருந்து பலர் பங்குபெற்று 3.5 இலட்சம் பேர் வாக்களிப்பில் கலந்துகொண்டனர். அதிகம் பேர் பங்கேற்றதால் வாக்களிப்பும், அதன் தொடர்ச்சியாக முடிவுகளும் தாமதமானது. பங்கேற்றவர்களின் முடிவுகளில், இறுதியாக புயூட்கெடெக் Pūteketeke எனும் பறவை இந்த நூற்றாண்டிற்கான பறவை என தெரிவானது.

முதலிடம் பெற்ற இப்பறவை Australasian Crested Grebe என்றும் அழைக்கப்படுகிறது. வாக்களிப்பில் ஆரம்பத்தில் இந்த பறவை பட்டியலில் பின் தங்கியிருந்தது.

ஆனால், அதன் பிரத்தியேக தோற்றமும், வீட்டில் வளர்ப்பதற்கு ஏற்ற குணாதிசயங்களும் வாக்காளர்கள் மனதில் மாற்றத்தை உண்டாக்கி, இதனை பட்டியலில் மெல்ல மெல்ல முன்னேற்றி இறுதியில் அதற்கே முதலிடம் கிடைத்தது.

ஏரிகளில் காணப்படும் பறவை வகையை சேர்ந்த Pūteketeke உலகில் தற்போது 3,000-இற்கும் குறைவாகவே உள்ளது.

Pūteketeke-க்கு 2,90,374 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

நியூசிலாந்தின் கிவி பறவை 12,904 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளதுடன், உலகின் அறிவார்ந்த பறவை எனப்படும் கிளி வகையை சேர்ந்த Kea 12,060 வாக்குகளுடன் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

"2023 ஆம் ஆண்டில், இந்த நூற்றாண்டின் பறவையாக Pūteketeke தகுதி பெறுகிறது, ஏனெனில் அவற்றின் எண்ணிக்கை மெதுவாக அதிகரித்து வருகிறது... அச்சுறுத்தலுக்குள்ளாகி அரிதாகி வரும் பறவை இனங்களுக்கு உதவினால், மீண்டும் அவை பெருகும்," என தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

நியூசிலாந்தை பூர்வீகமாகக் கொண்ட Pūteketeke எனும் நீர் பறவைகள் விசித்திரமான சத்தங்களை எழுப்பக்கூடியவை.

# யாவும் தமிழ்

தடித்த கன்னலில்
வெடித்த புரியில்
தெறித்த இளஞ்சாற்றின்
பரிணாமப் பரிதவிப்பின்
செரிநறா தீஞ்சுவை திளைத்து
அரியென அகிலமாளும் தமிழ்!!

சப்தமில்லா மௌனத்தில்
நிசப்த கிசுகிசுப்பில்
அஞ்சுதலில்லா வேங்கையும்
வஞ்சமில்லா மங்கையும்
நெஞ்சினிடை நிகர்த்த
சங்கத்து சாரளவோசை தமிழ்!!

மோகனப் பாலையில்
வெம்பு மணலூற்றில்
சேற்றாடை கழற்றிய பருவக் காற்று
மழலை மொழி எழுதி
புழுதி மணல் கிளரி
சுவர்க்கம் தேடும் சங்கதி தமிழ்!!

பேயிருட்டுப் பொழுதில்
பிரசண்ட மாதுர படபடப்பில்
உருகியுருகி ஊற்றெடுக்கும்
உன்மத்த கிலியில்
ஆத்மா அழியா அன்புத் திளைப்பில்
வாழும் மனதின் வைரப் புதையல் தமிழ்!

**நிலாக்கவி - சுஹா முஹம்மத்**
**சம்மாந்துறை**



# இன்று

ரா.பிரேம் சுரேஷ்
7/90 கோகுலம் ரைப்பிள் ரேஞ்
கோத்தகிரி - நீலகிரி மாவட்டம்

நேற்று என்பது நேரங்களின் கழிவு.நேற்று என்பது வாழ்ந்த வாழ்க்கையின் வாழ்த்துப்பா. நேற்று என்பது கலைந்து போன மேகங்களின் நிழல்.

இன்று நாம் எல்லோரும் ஆதார் அடிமைகளாய்.
முகங்கள் தொலைத்து எண்களின் அடையாள முகவரியாய்.

இன்று வீட்டுக்கொருவர் தூங்கா விளக்காய் அலைபேசியின் வெளிச்சத்தில் இருட்டுக்குள்.

வீட்டுக்கு வெளியே தெருவோர குப்பைகளாய் இருந்த ஆபாசம் இன்று படுக்கை அறையில் பத்திரமாய்.

இன்று மதங்களின் போர்வையில் மரணத்தின் கறைகள். அழிக்க நினைத்த பல தலைவர்கள் சிலைகளாய் சாதிகளின் பீடத்தில்.

இன்று பாலியல் செய்திகள் தினந்தோறும் கடந்து போகும் அச்சுப்பிழைகளாய்.

இன்று மதுவின் பெயரில் மரண அழைப்பிதழ். அடிக்கடி கண்ணீர் அஞ்சலி விளம்பரத்தில் இளைய தலைமுறை.

மனங்களை நேசித்த நேற்று என்பது நிஜங்களாய்.
மனிதம் மரத்துப்போன இன்று வெறும் நிழல்களாய்.

# கத்தார் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியின் சிறப்பு தொகுப்பு




கத்தார் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் ஊடக பணியாற்றிய ஊடகவியலாளருக்கு 13.02.2024 பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு ஸ்கை தமிழில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

30 நாட்கள் நடைபெற்ற ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்கை தமிழ் ஊடகத்தின் ஸ்தாபகத் தலைவர் ஜே.எம்.பாஸித் அவர்களின் தலைமையில் கலந்து கொண்ட அஸ்வர் ரிஸ்வி, ஹுபைப் முஸம்மில், மொஹமட் சிராஜ், ராஜயோகன், நிஹாசா நிசார், ஆஷா பிரியா, பாத்திமா ஆஷிகா, வசந்த் குமார், மொஹமட் ஆதில் மற்றும் ஏ.ஜே.எம்.ஜப்ராஸ் ஆகியோருக்கு சிறப்பான ஊடக சேவையாற்றியமைக்கு நிர்வாகம் சார்பாக வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

இதில் கத்தார் நாடானது பிரதானமாக ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் வகையில் வாய்ப்பை வழங்கியுள்ளதோடு தேவையான அனைத்து வசதிகளையும் அமைத்துக் கொடுத்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.
















# ஸ்கை தமிழ் ஊடக அனுசரணையில் கத்தாரில் குறுந்திரைப்பட வெளியீடு!

வசீகரன் பிரதான நடிப்பில் தமிழ்மணியனின் இயக்கத்தில் "பக்கம் 49" எனும் குறுந்திரைப்படம் (14) கட்டாரில் வெளியிடப்பட்டது.

மேலும் மன்சூர் அலி, சுபா சிவக்குமார் தயாரிப்பில் இப்படத்தில் ராஜ் குமார், சிவபாலன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

நிகழ்வில் கட்டார் தமிழர் சங்கத்தின் தலைவர் திரு.ம ணி பாரதி,ICBF அமைப்பின் ஆலோசகர் திரு.ராம செல்வம், கட்டார் முத்தமிழ் மன்றம் திரு.குரு ஸ்ரீ, கட்டார் தமிழர் சங்கத்தின் பிரதிநிதிகளான திரு.பாண்டியன், திரு.ரமேஷ் பரமசிவம், ஆருத்ரா சிலம்பக் கலைக்கூடத்தின் தலைவர் சரவணன், V2 நடனக் குழுவின் ஆசிரியர் திரு.வெங்கட் பிரபு, துல்லல் பறை குழுவின் மகேஸ், தமிழ் மருத்துவர் சுரேஷ் ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பணிப்பாளர் ஜே.எம்.பாஸித், முகமையாளர் அஸ்வர் ரிஸ்வி மற்றும் ஊடகத்தின் உறுப்பினர்களும், சோசியல் டிவி பணிப்பாளர் மொஹமட் சிராஜ் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் நிகழ்வை திரைப்பட குழுவினர் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர்.












# கத்தாரில் WOMEN WITH PASSION அமைப்பின் முதலாவது ஆண்டு நிறைவு விழா

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கத்தாரில் முன்னணியில் உள்ள தமிழ் பேசும் பெண்கள் குழுவான WOMEN WITH PASSION அமைப்பின் முதலாவது ஆண்டு நிறைவு விழா (23) Zaitoon உணவகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவானது முதலிலே தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து திருமதி. மீனா பிரதாப் அவர்களால் ஊக்கமளிக்கும் நற்சிந்தனை உரை நிகழ்த்தப்பட்டது. அதன்பின் அவ்வமைப்பின் தலைவியான திருமதி.ரங்கமணி ரவி அவர்களால் வரவேற்பு உரையும் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் அடுத்தக்கட்டமாக பிரதம அதிதியாக கலந்துகொண்ட டெலாய்ட் & டச் (Deloitte & Touche) நிறுவனத்தின் இயக்குனர் சௌமியா கிருஷ்ணன் அவர்களால் அமைப்பின் சின்னம் வெளியிடப்பட்டது. மேலும் இதில்,கௌரவ விருந்தினராக கத்தார் எழும்பின் அமைப்பின் இணை தலைவர் திரு. மகாதேவன் துரைராஜ், நிர்வாக குழு உறுப்பினர் திரு. கார்த்திகேயன் கணேஷ், ICBF ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.ராமசெல்வம், மங்கள் & மங்கள் ரியல் எஸ்டேட்டின் இயக்குனர் டாக்டர் சுரேஷ், ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் மற்றும் WOMEN WITH PASSION அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்துக்கொண்டனர்.

நிகழ்வின் பிரதம அதிதி அவர்களை உமாதேவி, பூமா டோஸ், மீனா பிரதாப், வீனா கோவிந்தன், ஹரிணி மகேஷ், கீர்த்திகா மோகன், உமாமகேஸ்வரி ஆகியோர் கௌரவித்து வரவேற்றனர்.







# ஆதிரன் சிலம்பம் மற்றும் பிராவோ கிரிக்கெட் அகாடமி இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் கிரிக்கெட் மற்றும் தடகள விளையாட்டு போட்டி

கத்தார் தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு ஆதிரன் சிலம்பம் மற்றும் பிராவோ கிரிக்கெட் அகாடமி இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் கிரிக்கெட் மற்றும் தடகள விளையாட்டு போட்டி (16 பிப்ரவரி 2024) தோஹா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.









துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
உங்கள் விளம்பரங்களையும்
குறைந்த கட்டணத்தில்
இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்
0757000791 | +97431060249
#Thuninthelu
www.skytamilnews.com